Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW14** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ரவிந்திரன் |
| Father/Husband Name | : | வேலுச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் காவல்துறையில் இராமநாதபுரம் மாவட்ட குற்றபிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து 30.05.2025 ம் தேதி பணிஓய்வு பெற்று இராமநாதபுரம் பாரதி நகரில் வசித்து வருகிறேன். கடந்த 18.07.2021 அன்று தேவிப்பட்டினம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அதிகாலை 01.30 மணிக்கு பொட்டகவயல் வடக்குத் தெருவைச் சேர்ந்த கர்ணன் மனைவி பஞ்சவர்ணம் என்பவர் தனது தம்பி திருநாவுக்கரசு என்பவருடன் காவல் நிலையம் வந்து கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.228/2021 சட்டபிரிவு 302 இதசன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9. பின்பு முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் அசலை

துரித தபால் மூலம் தலைமைகாவலர் 277 முத்துக்குமார் மூலம் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட காவல் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு ஒருநகலை காவல் ஆய்வாளரின் விசாரணைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கையில் வழக்கு சம்பவம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 17.07.2021 அன்று இரவு 08.30 மணியளவில். இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததா என்றால் கிடைத்தது. எந்த தேதியில், எத்தனை மணிக்கு கர்ணன் இறந்தது சம்மந்தமாக தகவல் வந்தது என்றால் ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் மருத்துவமனையில் இருந்து வரும் தகவலை பதிவு செய்வதற்கு ஒரு பதிவேடு இருக்கும் என்றால் சரிதான். அந்த பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு எப்போது முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் அதிகாலை 03.30 மணி. முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவரால் 18.07.2021ம் தேதி காலை 05.00 மணியளவில் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 சந்தேகத்தின் அடிப்படையில் கொடுத்த புகார் மனுவை பெற்று எதிரிக்கும், அ.சா.1 வகையறாவுக்கும் இடப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு அவர் செய்த புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.297/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW13** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் ஹருண்சாம் |
| Father/Husband Name | : | ராஜாராம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | மருத்துவர் |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது பட்ட மேற்படிப்புக்காக படித்துக்கொண்டிருக்கிறேன். கடந்த 17.07.2021ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். அன்று இரவு 10.05 மணியளவில் தேவிப்பட்டினம், பொட்டகவயல் வடக்குத் தெருவை சேர்ந்த கர்ணன் என்பவரின் மனைவி பஞ்சவர்ணம் என்பவர் அவரது கணவரான கர்ணனை என்பவரை சிகிச்சைக்கு அழைத்து வந்தார். கர்ணன் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். அவரை பரிசோதிக்கையில் அவர் சுயநினைவு இன்றி இருந்தார். அவருக்கு மூச்சுத்திணறல் இருந்தது. அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது. அவரது மனைவியான பஞ்சவர்ணத்திடம் விசாரித்தபோது

பொட்டகவயல் மாரியம்மன் கோவில் அருகே யாரோ ஒருநபர் இரவு 09.30 மணியளவில் கல்லால் தாக்கியதாக கூறினார். கர்ணனை பரிசோதிக்கையில் அவரது நெற்றியில் 7 X 5 cm அளவில் உள்அழுத்திய எலும்பு முறிவு (Frontal Depressed Fracture) காணப்பட்டது. வலது நெற்றியில் 2 X 3 cm அளவில் நசுங்கிய காயம் (Crush Injury) காணப்பட்டது. வலது காதில் வெட்டுக்காயம் காணப்பட்டது. மேற்படி கர்ணனை உடனே சிகிச்சைக்காக அனுமதித்தேன். அவருக்கு பிராணவாயு மற்றும் நரம்பு ஊசி செலுத்தப்பட்டது. செலுத்திக்கொண்டிருக்கும்போதே அவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டது. ACLS protocal ன் படி CPR சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. அட்ரீனலின், அட்ரோபின் மருந்து கொடுக்கப்பட்டது. மேற்படி கர்ணன் சிசிச்சை பலனின்றி இரவு 10.40 மணியளவில் இறந்துவிட்டார். பிறகு பிரேதம் பிரேத பரிசோதனைக்காக சவகிடங்ககிற்கு அனுப்பி வைத்தேன். முண்டுககல் போன்ற கல்லால் தாக்கும்போது கர்ணனுக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றா்ல உண்டு. 17.07.2021 – 18.07.2021 இரவு 01.00 மணியளவில் அர்ஜீனன் என்பவர் அவசர சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தபோது 17.07.2021 இரவு 08.30 மணியளவில் அவருக்கு தெரிந்த ஒருநபர் பொட்டகவயல் மாரியம்மன் கோவில் வடக்கு தெருவில் நெஞ்சில் ஒருவர் ஏறி மிதித்ததாக சொன்னார். அவரை பரிசோதிக்கையில் நெஞ்சில் 4 X 3 cm அளவில் சிராய்ப்புக்காயம் மற்றும் 1 X 1 cm அளவில் சிராய்ப்புக் காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக சிகிச்சை அளிக்க அனுமதித்தேன். நான் கர்ணனுக்கு தயாரித்த விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.7**. நான் அர்ஜீனனுக்கு தயாரித்த விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.8**. அர்ஜீனனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

கர்ணனுக்கு சிகிச்சை வழங்கியது குறித்தும், அர்ஜீனனுக்கு சிகிச்சை வழங்கியது குறித்தும் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. மேற்சொன்ன இரண்டு நபர்களுக்கும் நான்தான் சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். இருவருக்கும் ஒரேநாளில் சிகிச்சை அளித்தேனா என்றால் இல்லை. எதிரி அர்ஜீனனை யார் மருத்துவனையில் சிகிச்சைக்கு அனுமதித்தார்கள் என்றால் தெரியாது, நான் அறையில் இருககும்போது அவர்மட்டும் சிகிச்சைக்கு வந்தார்.

பொதுவாக விபத்து பதிவேட்டு அறிக்கையில் யார் காயம்பட்ட நபரை சிகிச்சைக்கு கொண்டுவந்தார்கள் என்பதை குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். நான் மேற்சொன்ன நபர்களை யார் கொண்டு வந்தார்கள் என்று விபத்து பதிவேட்டில் குறிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி அர்ஜீனனுக்கு எத்தனை மணியளவில் எந்த தேதியில், யாரால், எங்கு வைத்து காயம் ஏற்பட்டது என விபத்து பதிவேடு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 17.07.2021ம் தேதி இரவு 08.30 மணியளவில் பொட்டகவயல் மாரியம்மன் கோவிலில் அவருக்கு தெரிந்த ஒருநபர் நெஞ்சில் ஏறி மிதித்ததால் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். அர்ஜீனனுக்கு காயம் ஏற்பட்டு எத்தனை மணிநேரம் கழித்து கர்ணனுக்கு காயம் ஏற்பட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1 மணிநேரம் கழித்து காயம் ஏற்பட்டதாக அவரது மனைவி கூறியதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். 17.07.2021 மற்றும் 18.07.2021 தேதிகளில் நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தேனா என்றால் இரவு நேரப்பணியில் இருந்தேன். நான் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன், விபத்து பதிவேட்டில் அதுபற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கர்ணனை சிகிச்சை அளிக்கும்போது அவர் மது அருந்தியதற்கான தடையங்கள் இருந்ததா என்றால் அவர் சுயநினைவின்றி இருந்ததால் அவரிடம் கேட்க முடியவில்லை, ஆனால் அவரை அழைத்து வந்த அவரது மனைவி தன் கணவர் மது அருந்தியதாக சொன்னார். கர்ணனுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் குடிபோதையில் கரடுமுரடான கற்களில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கர்ணனுக்கு தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் அர்ஜீனனுக்கு தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையில் உள்ள கையெழுத்துகள் என்னுடையதுதான். அர்ஜீனனுக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என குறிப்பிட்டு கையெழுத்திட்டு நபரின் கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.